DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| | | |
|---|---|---|
| STC.NO.18/2020 | Crime No.: | Station : |
| PW : 1 | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | நல்லசாமி | Caste | |
| Fathers Name | ராமசாமி | Calling | விவசாயம் |
| Village | சத்தியமங்கலம் | Religion | |
| Taluk | | Age | 44 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 20.12.2024 |

**எதிரி ஆஜர்.**

**குறுக்கு விசாரணை:**

1. நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்வதற்காக எனக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்ததா என்றால் இல்லை. புகார்தாரரான காலம்சென்ற செல்லன் என்பவரின் மகனான தற்போதைய புகார்தாரரான கார்த்திக் என்பவருக்காக நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் ஆமாம். என்னுடைய முதல் விசாரணைக்காக தாக்கல் செய்திருந்த பிரமாணப் பத்திரிக்கையை நான் சொல்லி தயார் செய்யப்பட்டதுதான். செல்லப்பன் மற்றும் கார்த்திக் ஆகியோரை எப்படித் தெரியும் என்றால் செல்லப்பன் எனது பக்கத்துத் தோட்டத்துக்காரர் அதனால் செல்லப்பனையும், கார்த்திக்கையும் தெரியும். செல்வம் என்பவரை எப்படித் தெரியும் என்றால் என்னுடைய பூர்வீகமான திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள பெண்ணைத்தான் எதிரி திருமணம் செய்துள்ளார். அந்த வகையில் எனக்குத் தெரியும்.

2. எதிரி செல்வம் எனக்கு உறவுமுறையா என்றால் இல்லை. எதிரி செல்வம் என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் வியாபாரம். என்ன வியாபாரம் என்று எனக்குத் தெரியாது. எதிரியின் குடும்பப் பின்னணி விபரம் தெரியுமா என்றால் தெரியாது. செல்வம் என்பவருக்கு கடன் கொடுக்கப்போவதாக செல்லப்பன் என்னிடம் கூறினாரா என்றால் ஆமாம். எப்போது கூறினார் என்றால்

14.11.2016 அன்று என் முன்னிலையில்தான் செல்லப்பன், செல்வம் என்பவருக்குக் கடன் கொடுத்தார்.

3. எதிரிக்கு எத்தனை ரூபாயை எத்தனை வட்டிக்குக் கடன் கொடுக்கப்போவதாக என்னிடம் கூறினாரா என்றால் கூறினார். எவ்வளவு ரூபாய் கடனாகக் கொடுத்தார் என்றால் ரூபாய் 15 லட்சத்தை மாதம் ஒன்றுக்கு ரூபாய் 100/- க்கு ரூபாய் 1/- வட்டிக்கு கடன் கொடுத்தார்.

ரூபாய் 15 லட்சத்தை செல்லப்பன் கையில் வைத்திருந்தாரா அல்லது வங்கியிலிருந்து எடுத்துக்கொடுத்தாரா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. கடன் தொகை எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என்ற விபரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்லும் பிராமசரி நோட்டில் இரண்டாவதாக கையெழுத்து செய்ததாக சொல்லப்படும் நபரின் பெயர் என்னவென்று எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது.

4. தற்போது சாட்சி சொல்வதற்கு முன்பாக நான் கையெழுத்து செய்ததாக சொல்லும் கடனுறுதிச் சீட்டை நான் பார்த்தேனா என்றால் இல்லை. பிராமசரி நோட்டில் என்ன விபரம் எழுதியுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தொகை, வட்டி ஞாபகம் உள்ளது மற்ற விபரங்கள் ஞாபகம் இல்லை. எத்தனை ரூபாய் நோட்டுக்களாக கடன் கொடுக்கப்பட்டது என்றால் 500 ரூபாய் தாள்களாக கட்டுக்கட்டாக கொடுத்தார். அதை இருவரும் என் முன்னிலையில் எண்ணிப் பார்த்துக்கொண்டார்கள். நான் சொல்லும் கடனுறுதிச் சீட்டில் எதிரி செல்வம் எத்தனை கையெழுத்துகள் செய்தார் என்றால் 2 கையெழுத்தக்கள். கைரேகை செய்தாரா என்றால் இல்லை. கடனுறுதிச் சீட்டிற்கான வாசகங்கள் யார் சொல்லி எழுதப்பட்டது என்றால் எழுதிய கடனுறுதிச் சீட்டைத்தான் செல்வம் கொண்டுவந்தார்.

5. மேற்படி கடனுறுதிச் சீட்டை யார் எழுதினார்கள் என்று கேட்டுத் தெரிந்துகொண்டேனா என்றால் கேட்கவில்லை, கடனுறுதிச் சீட்டை யார் எழுதினார்கள் என்று தெரியாது. செல்லப்பன் என்பவருக்கு கடன் கொடுத்ததாக சொல்லும் தொகை எப்படி வந்தது என்று எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. பிராமசரி நோட்டை திரும்பப் பெற்றுக்கொண்டு வழக்குக் காசோலையை

செல்வம் செல்லப்பனுக்கு கொடுத்துள்ளார் என்று எனது பிரமணாப் பத்திரிக்கையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சங்கதிகள் எனக்கு யார் சொல்லித் தெரியும் என்றால் கார்த்திக் சொல்லிதான் தெரியும். காசோலையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள தொகை குறித்து எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது.

6. தோட்டத்தை செல்லப்பன் என்பவர் 23.01.2013ம் தேதியிலேயே விற்பனை செய்து அந்த இடத்தை விற்றுச் சென்றுவிட்டார் என்றால் சிறு பகுதியை விற்றிருக்கலாம் ஆனால் அதுபற்றி எனக்குத் தெரியாது, ஆனால் இன்றைய தேதியிலும் அவருக்கு சுமார் 3 ஏக்கர் தோட்டம் என் தோட்டத்திற்குப் பக்கத்தில் உள்ளது. என்னுடைய பூமி உள்ள க.ச.எண். என்னவென்றால் பட்டவர்த்தி அய்யம்பாளையம் க.ச.எண்.113. சத்தியமங்கலத்திலுள்ள உதயா பைனான்ஸை எனக்குத் தெரியுமா என்றால் தெரியும் அதில் நானும் ஒரு பங்குதாரர். மேற்படி விபரத்தை எனது பிரமாணப் பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

7. தாராபுரத்தில் எனது தந்தை ராமசாமி கவுண்டர் ஸ்ரீ வேலவர் பைனான்ஸ் என்ற நிறுவனத்தில் ஒரு பங்குதாரராக இருக்கிறார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஸ்ரீ வேலவர் பைனான்ஸ் என்ற கூட்டுப்பங்குதாரர் நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழில் 10வது நபராக குறிப்பிடப்பட்டுள்ள பங்குதாரரான ராமசாமிக் கவுண்டர், த/பெ. ஆறுமுகக் கவுண்டர் செட்டித் தோட்டம், அப்பியம்பட்டி, திருமையன் கவுண்டன் வலசு, ஒட்டன் சத்திரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என் தந்தையின் பெயரைத்தான் என்றால் சரிதான். மேற்படி ஸ்ரீ வேலவர் பைனான்ஸ் பதிவுச் சான்றிதழில் எதிரி செலவம் என்பவரும் ஒரு பங்குதாரராக 8வது பெயராக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. நிதி நிறுவனத்தை கையாலுவதில், எனது தந்தைக்கும் எதிரிக்கும் பிரச்சனை ஏற்பட்டு அங்கிருந்து காசோலைகளை எனது தந்தை எடுத்து வந்து என்னிடம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அதில் எதிரியின் காசோலையில் நிரப்பி செல்லப்பன் என்பவர் பெயரில் நான்தான் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கடனுறுதிச் சீட்டிலும், வழக்குக்

காசோலையிலும் எதிரி கையெழுத்து செய்யவில்லை என்றாலும், மேற்படி ஆவணங்களில் எதிரியின் கையெழுத்தை நானும், செல்லப்பன் என்பரும் கூட்டதாக சேர்ந்து போட்டு வசூலுக்கு தாக்கல் செய்து இந்த வழக்கைப் பொய்யாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பல கடன்களை அடைப்பதற்காகத்தான் செல்லப்பன் அவரது சொத்தை 2013-ல் விற்பனை செய்துள்ளார் என்றாலும், வழக்கில் சொல்லும் ரூபாய் 15 லட்சத்தைக் கடன் கொடுக்கும் அளவிற்கு புகார்தாரருக்கு வருமானம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

9. 2013-ல் முன் கடனுக்காகவும், குடும்ப செலவிற்காகவும்தான் அவரது சொத்தை விற்பதாக கிரைய ஆவணத்தில் செல்லப்பன் குறிப்பிட்டுள்ளதால் வழக்கக் கடனைக் கொடுக்கும் அளவிற்கு செல்லப்பனுக்கு வசதி வாய்ப்புகள் இல்லை என்றாம் அவர் எதிரிக்கு கடன் கொடுத்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என் தந்தைக்கும், எதிரிக்கும் உள்ள முன்விரோதத்தை என் தந்தை பயன்படுத்திக்கொண்டு என் மூலமாகவும், செல்லப்பன் மூலமாகவும் இந்த வழக்கை எதிரியின் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால சரியல்ல. நான் நடத்தும் உதயா பைனான்ஸில்தான் தற்போதைய புகார்தாரான கார்த்திக் பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். கார்த்திக்கின் மாத சம்பளம் எவ்வளவு என்றால் ரூபாய் 10,000/-. என்னுடைய பைனான்ஸிற்காக கொடுக்கப்பட்ட காசோலைகளை வைத்து கார்த்திக் பெயரில் பல வழக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. எதிரிக்கு கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும், முன்விரோதம் காரணமாக இந்த வழக்கு எதிரியின் மீது பதியப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை. சாட்சி முடித்துவைக்கப்பட்டது.